Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 48/2020**

வழக்கு சாட்சி எண். PW6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.சதிஷ் | கிராமம் | : | அரூர் |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 41 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1, 3 ஆஜர். 2ம் எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd** Day of **February 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த03.04.2019ம் தேதி அரூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மாலை 6.30 மணியளவில் மகாராணி க/பெ பிச்சமுத்து என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை 10 நபர்கள் அன்றைய தினம் மதியம் 2.00 மணிக்கு அவரது வீட்டில் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு 1) இடது கண்ணில் வீக்கம் 3x2x1cm அளவில் காணப்பட்டது. அவரை நான்

மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவகல்லூரி மருததுவமனைக்கு பரிந்துரைத்தேன். அங்கு பரிசோதித்து பார்த்ததில் இடது கண் சுற்று எலும்பின் முறிவு ஏற்பட்டிருந்தது. எனவே அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். **அசா.1ன் காயச்சான்று அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அன்றைய தினமே தேன்மொழி (41) க/பெ மூர்த்தி என்பவர் சிகிச்சைக்காக வந்தார். அவர் தன்னை 10 நபர்கள் அன்றைய தினம் மதியம் 2.00 மணிக்கு அவரது வீட்டில் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு 1) மூக்கின் மேல் வீக்கம் காணப்பட்டது. மூக்கிலிருந்து இரத்தம் கசிந்திருந்தது. அவரை நான் மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவகல்லூரி மருததுவமனைக்கு பரிந்துரைத்தேன். அங்கு பரிசோதித்து பார்த்ததில் மூக்கு எலும்பு உடைந்திருந்தது. எனவே அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று நான் சான்று வழங்கினேன். **அசா.2ன் காயச்சான்று அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1 முதலில் அரூர் அரசு மருத்துவமனைக்கு தான் வந்தார் என்றால் சரிதான். அதற்கு முன்பு எந்த மருத்துவமனையிலும் சிகிச்சை பெறவில்லை என்றால் சரிதான். அடிப்பட்ட நபர்கள் எந்த ஆயுதத்தால் தாக்கி காயம் ஏற்பட்டது என சொல்லவில்லை என்றால் சரிதான். அடிபட்ட நபர் அசா.1க்கு இடது கண்ணை சுற்றி வீக்கம் இருந்தது என்றால் சரிதான். அந்த காயத்தை தவிர எந்த வெளிப்புற காயமும் தென்படவில்லை என்றால் சரிதான். அசா.1 க்கு எந்த வெளிப்புற இரத்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். எதிரி சொன்னவாறு களைக்கொத்தால் ஒரு நபர்

தாக்கும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் சரிதான். ஒரு நபர் தவறி கீழே விழும்போது அசா.1க்கு ஏற்பட்ட காயமானது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது.

அசா.2 சிகிச்சைக்கு வரும்போது என்னை 10 நபர்கள் தாக்கினார்களா என சொன்னாரா என்றால் சரிதான். அவ்வாறு 10 நபர்கள் சேர்ந்து தாக்கும்போது உடம்பில் பல இடங்களில் அடிப்பட வாய்ப்புள்ளதா என்றால் சரிதான். சுயநினைவு இல்லாமல் ஒருவர் கிழே விழும்போது அசா.2க்கு ஏற்பட்ட காயமானது ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் சரிதான். அசா.2 எந்த ஆயுதத்தால் எதிரிகள் என்னை தாக்கியதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 48/2020**

வழக்கு சாட்சி எண். PW5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மயில்சாமி | கிராமம் | : | சிட்லிங் |
| தந்தை பெயர் | : | செல்வம் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 39 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd** Day of **February 2026.**

**முதல் விசாரணை**

நான் சிட்லிங்கில் வசித்துக்கொண்டு ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி அரூள்பிரசாத்தை தெரியும்.

இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். எங்கள் உறவினர்கள் என்றால்

சரிதான். அசா.1ன் வீட்டிலிருந்து சுமார் 2.5 கி.மீ. தூரத்தில் எனது வீடு உள்ளது என்றால் சரிதான்.

கடந்த 04.04.2019ம் தேதி மாலை 5.30 மணியளவில் கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையில் படம் வரைந்து மகஜர் தயார் செய்தேன் என்றும், அந்த மகஜரில் நான் சம்பவ இடத்தில் வைத்து சாட்சி கையொப்பம் இட்டேன் என்றும், போலீஸ் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு, தற்போது இருதரப்பினரும் எனது உறவினர்கள் என்பதால் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அளூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 48/2020**

வழக்கு சாட்சி எண். PW4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனி | கிராமம் | : | சிட்லிங் |
| தந்தை பெயர் | : | சுப்ரமணி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 51 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd** Day of **February 2026.**

**முதல் விசாரணை**

நான் சிட்லிங்கில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி அருள்பிரசாத்தை தெரியும்,

இன்று என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதல்ல. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். எங்கள் உறவினர்கள் என்றால்

சரிதான். அசா.1ன் வீட்டிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் எனது வீடு உள்ளது என்றால் சரிதான்.

கடந்த 04.04.2019ம் தேதி மாலை 5.30 மணியளவில் கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசார் வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையில் படம் வரைந்து மகஜர் தயார் செய்தேன் என்றும், அந்த மகஜரில் நான் சம்பவ இடத்தில் வைத்து சாட்சி கையொப்பம் இட்டேன் என்றும், போலீஸ் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு, தற்போது இருதரப்பினரும் எனது உறவினர்கள் என்பதால் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 48/2020**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜடையாண்டி | கிராமம் | : | சிட்லிங் |
| தந்தை பெயர் | : | ஜடையன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 62 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd** Day of **February 2026.**

**முதல் விசாரணை**

நான் சிட்லிங்கில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி அரூள்பிரசாத்தை தெரியும், எதிரிகள் எனது அண்ணன் மனைவி மற்றும் மகள் மகன் ஆவார். அசா.1 மகாராணி எனது சித்தப்பா மகள் ஆவார்.

இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

அசா.1ன் வீட்டிலிருந்து சுமார் 3/4 கி.மீ. தூரத்தில் எனது வீடு உள்ளது. தகராறு நடந்த சமயம் நான் வீட்டில் இல்லை என்றால் சரிதான்.

கடந்த 03.04.2019ம் தேதி மதியம் 2.00 மணியளவில் வழக்கின் எதிரிகள் அசா.1 மற்றும் 2ன் வீட்டிற்குள் அத்து மீறி நுழைந்து 2வது எதிரி களக்கொத்தால் அசா.1ன் வீட்டு கதவை உடைத்து அசா.2ன் மூக்கில் அடித்து எலும்பு முறிவு ஏற்படுத்தினார் என்றும், 1 மற்றும் 3வது எதிரிகள் அசா.1 மற்றும் 2ஐ மாறிமாறி கையால் அடித்து த காத வார்த்தைகளால் திட்டி கொல்லாமல் விடமாட்டோம் என மிரட்டினார்கள் என்றும், சம்பவம் குறித்து எனக்கு தெரியும் என்றும், போலீஸ் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு, தற்போது இருதரப்பினரும் எனது உறவினர்கள் என்பதால் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 48/2020**

வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தேன்மொழி | கிராமம் | : | சிட்லிங் |
| கணவர் பெயர் | : | மூர்த்தி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 47 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd** Day of **February 2026.**

**முதல் விசாரணை**

நான் சிட்லிங்கில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி அரூள்பிரசாத்தை தெரியும்,

எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையில் 6, 7 வருடகாலமாக நிலப்பிரச்சனை உள்ளது.

கடந்த 03.04.2019ம் தேதி மதியம் 2.00 மணிக்கு நானும், எனது அம்மாவும் அம்மா வீட்டிற்கு வெளியில் அமர்ந்து புளி தட்டிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி அருள்பிரசாத், அன்னபூரணி மற்றும் சாந்தா ஆகியோர் எங்களை கண்டார ஓலி,

தேவடியா, வல்லார ஓலி என திட்டி, உங்களை கொல்லாமல் விடுவதில்லை. நீங்கள் நிலத்திற்குள் எப்படி நுழைகிறோம் என் மிரட்டிக்கொண்டு எங்கள் வீட்டை நோக்கி வந்தார்கள். எதிரிகள் வருவதை பார்த்து நாங்கள் பயந்துகொண்டு வீட்டிற்குள் சென்று கதவை தாளிட்டு கொண்டோம். உடனே அருள்பிரசாத் நாங்கள் புளி தட்ட வைத்திருந்த களைக்கொத்தை எடுத்து கதவின்மேல்அடித்து கதவை உடைத்து சேதப்படுத்திவிட்டார்.

மேலும் எதிரி அருள்பிரசாத் கதவை உடைத்து உள்ளே வந்து களைக்கொத்தால் என்னை மூக்கின் மீது அடித்ததில் எனக்கு மூக்கு உடைந்து இரத்தம் வழிந்தது. எனது தாயாரான அசா.1யும் கன்னத்தில் அடித்தார்.

மேலும் 1வது எதிரி சாந்தா என்னை கன்னத்தில் மாறிமாறி அறைந்தார். எனது தாயாரையும் 1வது எதிரி கையால் அடித்தார். 3வது எதிரி என்னையும் எனது தாயாரையும் கையால் முதுகில் அடித்து காயப்படுத்தினார். எதிரிகள் எங்களை அடித்து காயப்படுத்திவிட்டு வெளியில் சென்று மீண்டும் உள்ளே வந்து நாங்கள் இறந்துவிட்டோமா என பார்த்து மேலும் மேலும் அடித்தார்கள்.

எங்கள் வீட்டிற்கு அருகில் எந்த வீடும் இல்லாததால் யாரும் வரவில்லை. பின்னர் நாங்கள் வலி தாங்க முடியாமல் வீட்டிலேயே இருந்தோம். நாங்களாகவே மெதுவாக சாலைக்கு வந்து அந்த வழியாக சென்ற ஒரு இருசக்கர வாகனத்தில் சிட்லிங் தனியார் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றோம். பின்னர் அங்கிருந்து அரூர் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அரூர் அரசு மருத்துவமனையில் எங்களை காயம் அதிகமாக இருப்பதால் மேல்சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

நாங்கள் தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்களுக்கும், எதிரிகளுக்கும் நிலப்பிரச்சனை தொடர்பாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். 2ம் எதிரி எங்களை கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லிக்கொண்டே எங்களது வீட்டு கதவை உடைத்தார். இந்த வார்த்தை நான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அதன்பிறகு 2ம் எதிரி களைக்கொத்தை எடுத்துவந்து என் மூக்கின் மீது அடித்து காயப்படுத்தினார். இந்த விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடமும் களைக்கொத்தால் அடித்து மூக்கின் மீது காயம் பட்டுவிட்டதாக சொன்னேனா என்றால் காயம் ஏற்பட்டது மட்டும் சொன்னேன். நாங்கள் சம்பவம் நடந்தபிறகு சுமார் மாலை 4.00 மணிக்கு சிட்லிங் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கே எங்களுக்கு முதலுதவி மட்டும் அளித்தார்கள். சிட்லிங் மருத்துவமனைக்கு சென்றது குறித்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் சிட்லிங் மருத்துவமனையில் முதலுதவி பெற்றபிறகு சுமார் 6.00 மணியளவில் அரூர் அரசு மருத்துவமனைக்கு வந்தோம் மருத்துவர்கள் எங்களுக்கு சிகிச்சை அளித்தார்கள். மருத்துவர் என்னிடம் எத்தனை பேர் அடித்தார்கள் என்பது பற்றி கேட்கவில்லை. சம்பவம் எதிரியின் நிலத்தில் நடந்தது என்றால் இல்லை எங்கள் வீட்டில் நடந்தது. எங்களுக்கும் எதிரிகளுககும் இருந்த நிலப்பிரச்சனையின் காரணமாக நாங்கள் தான்

எதிரிகளை தாக்கினோம். எதிரிகள் யாரும் எங்களை அடிக்கவில்லை. எதிரிகளை பழிவாங்கவேண்டும என்ற எண்ணத்தில் இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளை அடித்ததாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் எதிரிகளை அடிககவில்லை. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 48/2020**

வழக்கு சாட்சி எண். PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகாராணி | கிராமம் | : | சிட்லிங் |
| கணவர் பெயர் | : | பிச்சமுத்து | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 60 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1, 3 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. 2ம் எதிரி சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03rd** Day of **February 2026.**

**முதல் விசாரணை**

நான் சிட்லிங்கில் வசித்துக்கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி அரூள்பிரசாத்தை தெரியும்,

எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையில் 6 வருடகாலமாக நிலப்பிரச்சனை உள்ளது. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 2.00 மணிக்கு நானும், எனது மகள் தேன்மொழியும் வீட்டிற்கு வெளியில் அமர்ந்து புளி தட்டிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி அருள்பிரசாத், அன்னபூரணி மற்றும் சாந்தா ஆகியோர் எங்களை கண்டார ஓலி, தேவடியா, வல்லார ஓலி உங்களை

பொனம் ஆக்காமல் விடமாட்டோம் என திட்டிக்கொண்டே எங்கள் வீட்டை நோக்கி வந்தார்கள். எதிரிகளை பார்த்து நாங்கள் பயந்துகொண்டு வீட்டிற்குள் சென்று கதவை தாளிட்டு கொண்டோம். உடனே அருள்பிரசாத் நாங்கள் புளி தட்ட வைத்திருந்த கலைகொத்தை எடுத்து கதவின்மேல்அடித்து கதவை உடைத்து சேதப்படுத்திவிட்டார்.

மேலும் எதிரி அருள்பிரசாத் கதவை உடைத்து உள்ளே வந்து கலக்கொத்தால் என்னை இடது பக்க கன்னத்தில் அடித்தார். எனது மகள் தேன்மொழி கதவருகில் இருந்ததால் அவருக்கு மூக்கில்அடித்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

மேலும் 1வது எதிரி சாந்தா எனது மகள் தேன்மொழியை கன்னத்தில் அறைந்தார். 3வது எதிரி என்னையும் என்னையும் தேன்மொழியையும் கையால் முகுகில் அடித்து காயப்படுத்தினார். எதிரிகள் எங்களை அடித்து காயப்படுத்திவிட்டு வெளியில் சென்று மீண்டும் உள்ளே வந்து நாங்கள் இறந்துவிட்டோமா என பார்த்து மேலும் மேலும் அடித்தார்கள்.

எங்கள் வீட்டிற்கு அருகில் எந்த வீடும் இல்லாததால் யாரும் வரவில்லை. பின்னர் நாங்கள் வலி தாங்க முடியாமல் வீட்டிலேயே இருந்தோம். நாங்களாகவே தேக்கிக்கொண்டு எழுந்து தண்ணீர் குடித்துவிட்டு மெதுவாக சாலைக்கு வந்து அந்த வழியாக சென்ற ஒரு இருசக்கர வாகனத்தில் சிட்லிங் தனியார் மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்றோம். பின்னர் அங்கிருந்து அரூர் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அரூர் அரசு மருத்துவமனையில் எங்களை காயம் அதிகமாக இருப்பதால் மேல்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

நான் தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில்இருந்தபோது

கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். இன்று என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அசாஆ.1 குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அண்ணாமலை என்னுடைய அப்பா என்றால் சரிதான். அண்ணாமலைக்கு நானும், 1ம் எதிரியின் கணவர் குணசேகரன் என்பவரும் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். அண்ணாமலை என்பவருக்கு சிட்லிங் கிராமத்தில் சொந்தமாக நிலம் இருந்தது என்றால் சரிதான். அந்த நிலத்தை நானும் எனது அண்ணன் குணசேகரன் என்பவரும் முறையான பாகப்பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனக்கும், எதிரிகளுக்கும் நிலப்பிரச்சனை தொடர்பாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் சரிதான். வழக்கு சம்பவம் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் இரு தரப்பினரும் மாறிமாறி அடித்துகொண்டோமா என்றால் அவர்கள் தான் எங்கள் வீட்டில் புகுந்து எங்களை தாக்கினார்கள். நான் எதிரிகளை அடித்ததாகத்தான் முதல் தகவல் அறிக்கை கோட்டப்பட்டி காவல் நிலையத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தன்றே நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் எத்தனை மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் 3 நபர்கள் மீது பதிவு செய்யப்பட்டது. நான் சொல்வது போல் எதிரிகள் யாரும் எங்கள் வீட்டிற்குள் அத்து மீறி வரவில்லை என்றால் சரியல்ல. நான் தான் எதிரிகளுக்கு சொந்தமான நிலத்தில் அத்துமீறி பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகள்

எந்த ஆயுதத்தால் என்னை தாக்கினார்கள் என்றால் களைக்கொத்தால் தாக்கினார்கள். இதன்காரணமாக எனக்கு கன்னத்தில் இரத்தகாயம் ஏற்பட்டது. அதன் பிறகு 2ம் எதிரி எனது மகள் தேன்மொழி என்பவரை களைக்கொத்தால் மூக்கின் மீது அடித்து எலும்பு விரிசல் விட்டது. இதைப்பற்றி நான் போலீசார் விசாரணையிலும், சிகிச்சை அளித்த மருத்துவரிடமும், புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எந்த மருத்துவரிடம் சொன்னேன் என்றால் தருமபுரி மருத்துவரிடம் சொன்னேன். மருத்துவரிடம் என்னை 3 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன். நான் சிட்லிங்கில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் யார் யார் என்னென்ன வார்த்தையால் திட்டினார்கள் என்றால் என்னை 2ம் எதிரி நிலத்தை விட்டு ஓடிவிடு என சொல்லி அடித்து தேவடியா கண்டார ஓலி என திட்டினார். நான் சொல்வது போல் ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும், எதிரிகள் என்னுடைய வீட்டில் அத்து மீறி நுழைய வில்லை என்றும், எனக்கு ஏற்பட்ட காயங்கள் நானே ஏற்படுத்தி கொண்டு எதிரிகள் அடித்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்தை பொறுத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**